**இறைவனுக்கு மகன் இருக்கமுடியுமா?**

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 JANUARY

மலர்: 9 இதழ்: 4 ஜனவரி 2016 விலை: ரூ. 5




# மழையில் பொங்கிய மனிதநேயம்!

# மழையில் பொங்கிய மனிதநேயம்!

முகம் சுளிக்க வைக்கும் குடிசைப் பகுதிகளுக்குள் எல்லம் ஒயிட் காலர்கள் ஓடியாடி உதவுகிறார்கள். குடிசைவாசிகளோடு உணவைப் பிரித்து உண்கிறார்கள். ‘எங்கள் வீட்டில் வந்து தங்கிக்கொள்ளுங்கள்’ எனக் குரல்கள். அடுக்குமாடி குடியிருப்புகளில் விளிம்பு நிலை மனிதர்கள். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் தங்கியிருந்தவர்களுக்கு இஸ்லாமியர்கள் உணவளித்தார்கள். மொழி தெரியாத மாநிலங்களில் இருந்துகூட ஆதரவுக் கரங்கள். தண்ணீர் தராத கர்நாடகாகூட கண்ணீரோடு நிவாரணப் பொருட்களை அனுப்புகிறது. காவடி தூக்கியவர்களும், பால் குடம் எடுத்தவர்களும், மண் சோறு சாப்பிட்டவர்களும், லாயிட்ஸ் ரோட்டில் ஒப்பாரி வைத்தவர்களும் எங்கே போனார்கள்?

**சவப்பெட்டி தூக்கிய இஸ்லாமியர்கள்..!**

‘எங்கள் பாட்டி இறந்துவிட்டார். உடலைக் கொண்டு செல்ல முடியாமல் தவிக்கிறோம். உதவி செய்யுங்கள்’ - மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த த.மு.மு.க-வினருக்கு சூளைமேடு ஏரியாவில் இருந்து வந்தது இப்படியொரு தகவல். சூளைமேடு பகுதியில் வசிக்கும் பிரிட்டோ என்ற போலீஸ்காரரின் பாட்டி அந்தோனி அம்மாள் மருத்துவமனையில் இறந்துவிட்டார். பிரிட்டோ போனில் உதவி கேட்க களத்தில் குதித்திருக்கிறார்கள் த.மு.மு.க-வினர். அந்தோனி அம்மாளின் உடலை மருத்துவமனையில் இருந்து வீட்டுக்குக் கொண்டு செல்ல முடியாத அளவுக்கு சூளைமேடு ஏரியா முழுவதும் கழுத்தளவு தண்ணீர். மருத்துவமனையில் இருந்து உடலை ஸ்டெரக்சரில் வைத்து கழுத்தளவு தண்ணீரில் தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு வந்து வீட்டில் சேர்த்தனர் த.மு.மு.க-வினர். மழை அதிகமாக இருந்ததால், அடக்கம் செய்யக்

# நிவாரண முகாம்களாகப் பள்ளிவாசல்கள்



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2016 JANUARY**

**மலர்: 9 இதழ்: 4 ஜனவரி 2016 விலை: ரூ. 5**


## பொருளடக்கம்


*மழையில் பொங்கிய மனிதநேயம்! -2*
*நெகிழ்வூட்டும் நிகழ்வுகள் - 4*
*மனம் திறந்த மடல்கள் - 6*
*கருணை காட்டுதல் இறைவிசுவாசியின் கடமை 8*
*சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கும் மார்க்கம் -9*
*மக்கள் நலனே இஸ்லாத்தின் அடிப்படை -10*
*வீரமங்கை சுபைதா! 12*
*லுக்மான் தன் மகனுக்கு செய்த உபதேசம் - 13*
*அல்லாஹ்வுக்கு நான் ஏதும் செய்யட்டுமா? -15*
*இரக்கம் அண்ணலாரின் வழிமுறை -16*
*நகரவிடாமல் செயலிழக்கச்செய்த மழை -17*
*சமூக நல்லிணக்கத்திற்காக தியாகம் -18*
*சுன்னத்(விருத்தசேதனம்) செய்வதால் ஏற்படும் நன்மைகள் -19*
*ஒழுக்க வாழ்வின் பால் மீளுவோம்-21*
*இறைவனுக்கு மகன் இருக்கமுடியுமா? -22*
*நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" -23*
*வாசகர் எண்ணம் -24*



published from

**House of Peace,**

PO Box No.1726
# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,
Bangalore 560 017 - Ph. 9886001357

முடியாத அளவுக்கு சூளைமேடு ஏரியா முழுவதும் கழுத்தளவு தண்ணீர். மருத்துவமனையில் இருந்து உடலை ஸ்டெரக்சரில் வைத்து கழுத்தளவு தண்ணீரில் தலைக்கு மேல் தூக்கிக்கொண்டு வந்து வீட்டில் சேர்த்தனர் த.மு.மு.க-வினர். மழை அதிகமாக இருந்ததால், அடக்கம் செய்யக் குழிகூட தோண்ட முடியவில்லை. ஒரு நாள் கழித்துத்தான் குழி தோண்ட முடிந்தது. கிறிஸ்தவ முறைப்படி சவப்பெட்டியில் அந்தோனி அம்மாளின் உடலை வைத்து அடக்கம் செய்தனர். மருத்துவமனையில் இருந்து உடலை வீட்டுக்குக் கொண்டு வந்த த.மு.மு.க-வினர்தான் அடக்கம் செய்யவும் உதவியிருக்கிறார்கள். வீட்டில் இருந்து சவபெட்டியை இரண்டு கி.மீ. தூரத்துக்கு வெள்ளத்தில் சுமந்துபோயிருக்கிறார்கள்.

''அஞ்சலி செலுத்த உறவினர்கள்கூட வரமுடியவில்லை. வெள்ளம் சூழ்ந்து மழையும் பொழிந்துகொண்டிருந்த அந்த நரக வேதனையில் வீட்டில் மரணம் என்றால், அந்த வலியை வார்த்தைகளில் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட சூழலில் முஸ்லிம் இளைஞர்கள் செய்த உதவியை நினைத்து நெகிழ்ந்து போகிறேன்'' என நெகிழ்கிறார் பிரிட்டோவின் அம்மா மரியம்மாள்.

த.மு.மு.க. மத்திய சென்னை மாவட்ட பொருளாளர் முஹம்மது அலி தலைமையிலான டீம்தான் இந்தச் சேவையை செய்திருக்கிறது. ''கிறிஸ்தவரின் உடலை முஸ்லிம்கள் சுமந்தார்கள் எனச் சொன்னால்கூட அது மலிவான பிரசாரம் ஆகிவிடும். இது மனிதநேய உதவி. இந்த வெள்ளத்துக்காக மட்டுமல்ல... ரத்ததானம், ஆம்புலன்ஸ் உதவிகள் என ஏற்கெனவே செய்து வருகிறோம்'' என்றார்.

கிறிஸ்தவ முறைப்படி சவப்பெட்டியில் அந்தோனி அம்மாளின் உடலை வைத்து அடக்கம் செய்தனர். மருத்துவமனையில் இருந்து உடலை வீட்டுக்குக் கொண்டு வந்த த.மு.மு.க-வினர்தான் அடக்கம் செய்யவும் உதவியிருக்கிறார்கள். வீட்டில் இருந்து சவபெட்டியை இரண்டு கி.மீ. தூரத்துக்கு வெள்ளத்தில் சுமந்துபோயிருக்கிறார்கள்.

''அஞ்சலி செலுத்த உறவினர்கள்கூட வரமுடியவில்லை. வெள்ளம் சூழ்ந்து மழையும் பொழிந்துகொண்டிருந்த அந்த நரக வேதனையில் வீட்டில் மரணம் என்றால், அந்த வலியை வார்த்தைகளில் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட சூழலில் முஸ்லிம் இளைஞர்கள் செய்த உதவியை நினைத்து நெகிழ்ந்து போகிறேன்'' என நெகிழ்கிறார் பிரிட்டோவின் அம்மா மரியம்மாள்.

த.மு.மு.க. மத்திய சென்னை மாவட்ட பொருளாளர் முஹம்மது அலி தலைமையிலான டீம்தான் இந்தச் சேவையை செய்திருக்கிறது. ''கிறிஸ்தவரின் உடலை முஸ்லிம்கள் சுமந்தார்கள் எனச் சொன்னால்கூட அது மலிவான பிரசாரம் ஆகிவிடும். இது மனிதநேய உதவி. இந்த வெள்ளத்துக்காக மட்டுமல்ல... ரத்ததானம், ஆம்புலன்ஸ் உதவிகள் என ஏற்கெனவே செய்து வருகிறோம்'' என்றார்

### .தற்கொலை உடல் மீட்பு

வில்லிவாக்கம் சிட்கோ நகரில் வீட்டில் இருந்த ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இறந்த தகவலை முதல் மாடியில் குடியிருந்தவர்கள் த.மு.மு.க-வின் அரசியல் பிரிவான மனிதநேய மக்கள் கட்சியினரிடம் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கட்சியின் தொண்டர் அணியினர்தான் உடலை மருத்துவமனைக்குக் கொண்டுபோனார்கள். மத்திய சென்னை மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் தாஹா நவீன் தலைமையில்தான் இந்தப் பணி நடைபெற்றிருக்கிறது. "தற்கொலை

செய்தவரின் உடலை வெளியே கொண்டு வரவே சிரமமாகிவிட்டது. அந்தப் பகுதி முழுவதும் வெள்ளநீர் நிரம்பியிருந்ததால் ஆம்புலன்ஸ்கள்கூட வரவில்லை. எங்கள் அமைப்பில் இருந்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டுத்தான் உடலை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம்" என்றார் தாஹா நவீன்.

## பிணத்தோடு மூன்று நாட்கள்!

காஞ்சிபுரம் மாவட்டம் செம்மஞ்சேரியில் உள்ள அரசு குடியிருப்பு வளாகத்தின் அருகில் வயதான மூதாட்டி ஒருவர் தனியாக குடிசைபோட்டு வசித்து வந்தார். வெள்ளம் திடீரென்று பெருக்கெடுத்து ஓடியதால் மூதாட்டியின் வீடு அடித்துச் செல்லப்பட்டது. உதவி கேட்டு மூதாட்டி அலற, மாடியில் வசித்து வந்த அவருடைய மகள், மூதாட்டியைத் தூக்கிக்கொண்டு வரும்போது உயிர் பிரிந்துவிட்டது. அதனால், மாடியில் இருந்து உடலைக் கீழே கொண்டு வர முடியவில்லை. வெள்ளம் வடியாததால் மூன்று நாட்களாக உடலை வைத்துக்கொண்டு திண்டாடி யிருக்கிறார்கள். தமிழ்நாடு தவ்ஹித் ஜமாத் அமைப்பினருக்குத் தகவல் கிடைத்து உடலை மீட்டு அடக்கம் செய்திருக்கிறார்கள். மீட்புப் பணியில் ஈடுபட்ட அந்த அமைப்பின் நிர்வாகி அப்துல் ரஹ்மான், ''அந்தப் பகுதி முழுவதும் கழுத்தளவு தண்ணீர் சூழ்ந்திருந்ததால் உடலை மாடியில் இருந்து இறக்க முடியவில்லை. இதனால் வீட்டில் துர்வாடை வீசியது. அந்த உடலோடு உறவினர்கள் பரிதவித்து நின்றனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த கவுன்சிலர், போலீஸ் என யாருமே உதவவில்லை. ஃப்ரிசர் பாக்ஸைக்கூட அங்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. அப்படிப்பட்ட சூழலில்தான் எங்களுக்குத் தகவல் கிடைத்து உடலைத் துணியால் சுற்றி வெளியே கொண்டு வந்து நல்லடக்கம் செய்தோம்'' என்றார்.

## லாரியில் காப்பற்றப்பட்ட கர்ப்பிணிகள்!

வெள்ளத்தில் சராசரி மனிதர்களே சிக்கியபோது இன்னொரு உயிரை சுமந்துகொண்டிருந்த கர்ப்பிணிகளின் நிலையைச் சொல்லவா வேண்டும்? அப்படி வெள்ளத்தில் சிக்கிய நான்கு கர்ப்பிணிப் பெண்களை மீட்டனர் த.மு.மு.க-வினர். "வில்லிவாக்கம் சிட்கோ நகரில் மூன்றாவது பிளாக் பகுதியில் தண்ணீர் கீழ்தளம் முழுவதும் மூழ்கிவிட்டது. வீட்டில் மேல்தளத்தில் நிறைமாதக் கர்ப்பிணி ஒருவருக்கு வலி ஏற்பட 108-க்கு போன் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தெருவுக்கு ஆம்புலன்ஸ் வர முடியவில்லை. தகவல் அறிந்து அங்கே போன த.மு.மு.க-வினர் ஏணி மூலம் முதல் மாடிக்குப் போய் கர்ப்பிணிப் பெண்ணை மீட்டு லாரி ஒன்றில் ஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு வந்தார்கள். இப்படி வெள்ளத்தில் சிக்கிய மூன்று கர்ப்பிணிப் பெண்களை பாதுகாப்பாக லாரிகளில் ஏற்றி மருத்துவமனைகளில் சேர்த்திருக்கிறார்கள். ''வலியால் அவர்கள் துடித்து அழ.. தண்ணீர் வேகமெடுத்து ஓட அவர்களை மீட்டு லாரியில் ஏற்றியது சவாலான பணிதான்'' என்கிறார் த.மு.மு.க நிர்வாகி ஜாஹிர் ஹுசைன்.

## ரோட்டில் நடைபெற்ற தொழுகை..!

மதங்கள் பார்க்காமல் பள்ளிவாசல்களில் அடைக்கலம் கொடுத்திருக்கிறார்கள். சென்னை மக்கா பள்ளி, மண்ணடி பள்ளி, தாம்பரம் பள்ளி உள்ளிட்ட பள்ளிவாசல்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருந்தனர். இவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் உடை,

மாத்திரைகள் அங்கு வழங்கபட்டன. வேளச்சேரியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் 100-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருந்தனர். வெள்ளிக்கிழமை சிறப்புத் தொழுகை அன்று பள்ளிவாசலில் உள்ள மக்களை வெளியேற்ற கூடாது என முடிவு செய்து சிறப்புத் தொழுகையை அங்கிருந்தவர்கள் சாலையில் தொழுத சம்பவமும் நிகழ்ந்தது.

**தவித்த கண்பார்வையற்றோர்!**

சென்னை பெருவெள்ளத்தில் சாதாரண மனிதர்களே தத்தளித்த நிலையில் மாற்றுத்திறனாளிகள் நிலையைச் சொல்ல வேண்டுமா? கோடம்பாக்கம் லிபர்டி அருகே ஆதிதிராவிடர் அரசினர் விடுதியில் வெள்ளம் சூழத் தொடங்கியது. அதில் தங்கி இருந்த கண்பார்வையற்ற மாணவர்கள் 11 பேருக்கு என்னவென்று நிலவரம் புரியவில்லை. நண்பர்களின் உதவியுடன் டாக்டர் நடேசன் சாலையில் உள்ள இந்திய தவ்ஹீத் ஜமாத்தின் மஸ்ஜித்துர் ரஹ்மான் மசூதிக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஒரு ஆம்புலன்ஸ் மூலம் அவர்கள் சிக்கியிருந்த இடத்துக்குச் சென்று பத்திரமாக மீட்கப்பட்டு மசூதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டனர்.

நன்றி:vikatan.com ஜுனியர் விகடன்



# நெகிழ்வூட்டும் நிகழ்வுகள்

இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறவேண்டும் என்பதற்காகவே பெருமழை பெய்ததோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது....

நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த முகமது யூனுஸ் சென்னையில் இ-காமர்ஸ் நிறுவனம் நடத்தும் இளைஞர். டிசம்பர் 1ஆம் தேதி இரவு சென்னையை சவட்டி எடுத்தது மழை. அந்த நேரத்தில், “ஊரப்பாக்கம் பகுதியில் மக்கள் கழுத்தளவு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்“ என்று முகமது யூனுஸுக்கும் வாட்ஸ் அப்பில் தகவல் பகிரப்படுகிறது. அப்போது இரவு மணி 10.30. தன் நண்பர்கள் முஸா∴பர், கோபிநாத், ரியாஸ் இவர்களைக் கூட்டிக் கொண்டு கிளம்புகிறார் யூனுஸ். நால்வரும் பெசன்ட் நகரில் மீனவர்களிடம் ஏழு படகுகளைக் கேட்டு வாங்கி லாரியில் ஏற்றிக் கொண்டு ஊரப்பாக்கம் நோக்கிப் புறப்படுகிறார்கள். அடுத்து நடந்தவைகளை யூனுஸ் விவரித்தார்: எங்களைவிட வேகமாக செயல்பட்டனர் மீனவ நண்பர்கள். நாங்கள் நால்வரும் ஆளுக்கொரு படகில் இருந்தோம். கிட்டத்தட்ட 6 அடிக்கும் மேல் சென்று கொண்டிருந்த தண்ணீர், நான் சென்ற படகைத் தலைகீழாகக் கவிழ்த்துப் போட்டது. எனக்கு நீச்சல் தெரியாது. நல்லவேளை, மீனவ நண்பர்கள் காப்பாற்றிவிட்டார்கள். அப்போதுதான் அங்கிருந்த பெட்ரோல் பங்க் பக்கத்தில் ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் கழுத்தளவு தண்ணீரில் தத்தளித்தபடி எங்களைப் பார்த்துக் கை அசைத்துக் கொண்டிருந்ததை கவனித்தேன். அருகில் சென்று அவர்களை படகில் ஏற்றிய பிறகு தான் அந்த பெண் பிரசவ வலியில் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவரது பெயர் சித்ரா. உடனிருந்தவர் அவருடைய கணவர் மோகன். அதிகாலை 5.30 மணி. பெருங்களத்தூர் அருகே ஒரு பாலத்தின்

அருகே சித்ராவையும் மற்றவர்களையும் இறக்கிவிட்டு விட்டு மற்றவர்களை மீட்பதற்காக மீண்டும் ஊரப்பாக்கம் நோக்கிப் படகை செலுத்தினோம். அன்று மட்டுமே எங்களது குழுவினர் சுமார் 450 பேரை ஆபத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறோம். இன்னமும் எங்களது பயணம் நிற்கவில்லை. அழைப்புகளைக் கேட்டு ஓடிக்கொண்டே இருக்கிறோம்" என்று சொன்னார் யூனுஸ்.

யூனுஸால் காப்பாற்றப்பட்ட சித்ரா அன்றைய தினமே பெண் குழந்தைக்குத் தாயாகி இருக்கிறார். தங்களையும் தங்களுடைய வாரிசையும் காப்பாற்றிக் கரை சேர்த்த யூனுஸைப் போற்றும் விதமாக அவரது பெயரையே தங்களுடைய பெண் குழந்தைக்கு வைத்திருப்பதாக வாட்ஸ் அப்பில் வாஞ்சையோடு தகவல் பகிர்ந்திருக்கிறார் சித்ராவின் கணவர் மோகன். இதில் நெகிழ்ந்து போன யூனுஸ், அந்தக் குழந்தையின் படிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்வதாக தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இதுகுறித்துப் பேசிய யூனுஸ், இதற்கு முந்தைய மழைக்கு நுங்கம்பாக்கத்திலும் பள்ளிக்கரணையிலும் உள்ள எனது இரண்டு வீடுகளை மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கொடுத்திருந்தேன். அங்குத் தங்கி இருந்த மக்கள் என்னை வாயாற வாழ்த்தினார்கள். சித்ரா - மோகன் தம்பதி தங்கள் குழந்தைக்கு என் பெயரை வைத்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைக்குப் படிப்புச் செலவை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். விவசாயிகளையும் மீனவர்களையும் அவர்கள் வாழும் நிலையில் இருந்து முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதும் மழை எங்களுக்குத் தந்திருக்கும் பாடம். நமக்குத் தெரிந்த டெக்னாலஜியை வைத்து அந்த இலக்கை எட்டுவதற்காக ஒரு குழுவை அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார். தற்போது கடலூரில் பாதிக்கப்பட்ட மக்களுடன் இருப்பதாகவும் விரைவில் சென்னைக்குத் திரும்பி வந்து குழந்தை யூனுஸைப் பார்க்கப் போவதாகவும் யுனுஸ் கூறினார்.

நன்றி : தமிழ் தி இந்து & இண்டியா டைம்ஸ்

# வழித்தடை நீக்கினும் வழிபாடே

பாதையில் துன்பம் தரக் கூடிய பெரிய கல்லோ அல்லது முள்ளோ அல்லது கண்ணாடிச் சில்லோ கிடந்தால் அதை நாம் அகற்ற வேண்டும். ஆனால் நம்மில் பலரும் இவற்றை நம் கண்ணால் பார்த்தும் கூட அதைக் கண்டு கொள்ளாமல் சென்று விடுகிறோம். சிலர் அவற்றால் காயப்பட வாய்ப்புண்டு. சிலர் புகை பிடித்து விட்டு நெருப்புக்கங்கை அணைக்காமல் அப்படியே தெருவில் போட்டு விடுகிறார்கள். செருப்பு போடாத சிறுவர்கள் அதை மிதித்து, துடிதுடித்துப் போவார்கள். எனவே இஸ்லாம் மனிதநேயத்தைக் கருதி, பாதையில் கிடக்கும் இடையூறு அளிக்கும் பொருட்களை அகற்றுவது ஈமானில்(இறைநம்பிக்கையில்) ஒரு பகுதி என்று கூறுகிறது. படைத்தவனை நம்பியவர்களிடத்தில் அவசியம் இச்செயல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஈமான் (இறைநம்பிக்கை) என்பது எழுபதுக்கும் அதிகமான கிளைகளை கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை (லா இலாஹ இல்லால்லாஹ்) என்று கூறுவதாகும். அவற்றில் கடைசி நிலை, பாதையில் கிடக்கும் நோவினை தரக்கூடியவற்றை அகற்றுவதாகும்.

*அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் (51)*

**மழையில் பொங்கிய மனிதநேயம்!**

# மனம் திறந்த மடல்கள்

முகநூல் முழுதுமே இதுபோன்ற பதிவுகளால் நிறைந்து காணப்படுகின்றது. இவற்றில் எதையும் விட மனமில்லை. இருந்தாலும் விரிவஞ்சி சிலவற்றை மட்டும் இங்கு பதிவு செய்கிறோம்.

## நன்றி... உங்களுக்கும் கடவுளுக்கும்

...உதவுவாரில் எங்கே பார்த்தாலும்... குல்லாக்கள்... SDPI, TNTJ, TMMK
பாதிக்கப்பட்டோரில் யாரைக் கேட்டாலும்...
”பாய்கள்”, ”முஸ்லீம்காரவங்க வந்து காப்பாத்துனாங்க”,
”சாய்புகள்தான் சாப்பாடு போட்டுகிட்டிருக்காங்க”.
“தொடக்கி விட்டுவிட்டார்கள்“ என்றில்லை
“இடையில்தான் வந்தார்கள்“ என்றில்லை
“திணறி நின்றார்கள்“ என்றில்லை
“சோர்ந்து விலகிவிட்டார்கள்“ என்றில்லை!

தங்கள் மனிதத்தை தங்கள் கடவுளுக்கும்,
தங்கள் ஆண்மையை தங்கள் எதிரிகளுக்கும், தங்களுக்கும் உணர்த்திக்கொண்டஇவர்களது அதிரவைக்கும் அற்பணிப்பு!
உடல்நலம், வீடு மறந்து - ஒருவார ஓட்டத்திற்குப் பின்னும்
முகத்தில் அயர்ச்சியில்லை! பேச்சில் கடுப்பில்லை!
இன்னும் ஓயந்ததாயில்லை... - இன்னும்
பெரிதாக அரவணைக்கிற திட்டங்களோடு!
இது போன்ற பேரிடரில் மக்களுக்காக
மக்கள் மத்தியில் திட்டமிட்டே கடவுள்
வைத்துவைத்த இரக்கத்தின் விதைகளின்
விஸ்வரூபங்களாக தெரிகின்றனர்!
இஸ்லாமியரே, உங்கள் தெய்வத்தைத் தெரியாது
உங்களைத் தெரிந்துகொண்டோம்!
உள்குத்து இல்லாத ஒரு பெரிய நன்றி...
உங்களுக்கும் - உங்களை
இப்படி அனுப்பிய உங்கள் கடவுளுக்கும்!

\- **ராமகிருஷ்ணா எஸ்.,**

## உணவளித்த பாய்மார்கள்

நாங்கள் வசிக்கும் அடையார் சாஸ்திரி நகரில் இதுவரையில் எந்த அரசு அதிகாரிகளோ அரசியல் வாதிகளோ வந்து பார்க்கவே இல்லை. ஆனால் நேற்று சிலர் எங்க தெருவுக்கு நீந்தி வந்து ஒவ்வொரு வீட்டுக்கும் உணவு கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் முஸ்லிம் பாய்மார்கள் என்பது மட்டும் தெரியும். அவர்களை இதற்கு முன் நான் பார்த்தது கூடக் கிடையாது.அவர்களுக்கு கோடானு கோடி நன்றிகள்

\- **திவ்ய தர்ஷினி**

# ஈழசகோதரியின் இதயத்தை தொட்ட பதிவு

உலகில் பயங்கரவாதம் என்ற சொல் கேட்டால் அங்கே முஸ்லிம்கள் இருப்பார்கள். சகிப்புத்தன்மை அற்ற என்ற சொல் வந்தால் அந்த வசனம் இஸ்லாத்தோடு முடியும். உலகில் எங்கு யுத்தம் நடந்தாலும் அங்கு முஸ்லிம் என்கின்ற இனம் சம்பந்தப்படும்.

இதன் உண்மை பொய்யை ஓரமாக வைத்துவிட்டு இந்தத் தகவலைப் பாருங்கள்...

நான் மூன்று நாட்களாக முகநூலைக் கவனித்து வருகிறேன். சென்னை வெள்ளத்தில் உதவிய மக்களில் அனேகமானவர்கள் முஸ்லிம்களே. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 5 பேர்களோடு இன்பாக்சில் உரையாடினேன். அவர்கள் அனைவரும் சொன்ன ஒரே கருத்து எனக்கு உதவியவர் ஒரு முஸ்லிம் என்று.

உலகில் பிற மதத்தவர்களின் உயிரைக் கொல்லத் துடிப்பவர்கள் உயிரைக் காப்பாற்றப் போராடுகிறார்கள் என்றால் அதில் இரு விடயங்கள் கவனிக்கத்தக்கது

1. இஸ்லாமியர் பற்றி இதுவரை வந்த அனைத்தும் ஊடக வதந்தி
2. இவர்கள் மதத்தைப் பரப்ப சண்டையும் பிடிப்பார்கள். உதவியும் செய்வார்கள்.

இஸ்லாமியர் பற்றி இதுவரை வந்த அனைத்தும் ஊடக வதந்தி என்று சொன்னால் அல்குவேதா, தாலிபான், ஐஎஸ் போன்ற அமைப்புகள் பொய் என்று ஆகிவிடும். அது பொய்யல்ல.

அப்படி என்றால் அது மூளை சலவை செய்யப்பட்ட முஸ்லிம் என்று பெயர்வைத்த மிருகங்களாக இருக்க வேண்டும்.

அல்லது எமது ஈழப் போரைப் போன்று உரிமைக்காக போராடும் அமைப்பாக இருக்க வேண்டும்.

மதத்தைப் பரப்ப உதவி செய்வதாக எடுத்தால் அது இந்த வெள்ள நிவாரணத்திற்குப் பொருந்தாது. ஏன் என்றால் அவர்கள் நோக்கம் உதவி செய்வது மட்டுமே தவிர எந்த உள்நோக்கமும் இல்லை என்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நண்பர் Satheesh Kumar தெளிவாக அடித்து சொன்னார். நண்பர் செந்தில் குமார் சொன்னதும் அதுதான்.

தமது பெண்களையே மசூதிக்கு அனுமதிக்காதவர்கள் இந்துக்களுக்காக மசூதியைத் திறந்து கொடுத்தது தமது மதச் சம்பிரதாயங்களைக் கூட மனிதநேயத்துக்காக விட்டுக் கொடுத்ததால்தான்.

ஜமால் என்கின்ற ஒரு தனி நபர் ஒரு நாளைக்கு 500 பேருக்கு உணவளிக்கிறார். சித்ரா என்ற கர்ப்பிணி வெள்ளத்தில் சிக்கி பிரசவ வேதனையில் துடித்திருக்க அவருக்கு யூனிஸ் என்ற நபர் உதவியதால் பிறந்த பிள்ளைக்கு யூனிஸ் என்றே பெயர் வைக்கப்பட்டது. இதை நான் மனமாற்றமாகவன்றி மதமாற்றமாக்காணவில்லை. மேலும் முஸ்லிம் மதத்துக்கு அழைக்கப்படாமல் இஸ்லாம் பெயரில் வாழும் ஒரு இந்துவே யூனிஸ்.

தவ்ஹீத் ஜமாத் என்னும் அமைப்பு இராணுவம் போலீஸ் என்கின்ற எண்ணிக்கையைத் தாண்டி 30,000 தொண்டர்களை வைத்து மீட்புப் பணி செய்கிறது.

ஓரக்கண்ணால் பார்க்கப்பட்ட இஸ்லாமியர்கள் சென்னை வெள்ளத்துக்குப் பின்னர் தங்களை இரண்டு கண்ணாலும் பார்க்கவைத்துவிட்டார்கள் என்பதே நிதர்சனம். வாழ்க மதம் தாண்டிய மனித நேயம்.

# கருணை காட்டுதல் இறைவிசுவாசியின் கடமை

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பூமியில் உள்ளோர் மீது கருணை காட்டுங்கள், வானத்தில் உள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான்."
மேலும் கூறினார்கள்: "மனிதர்களுக்கு கருணை காட்டாதவர் மீது அல்லாஹ் கருணை காட்டமாட்டான்." (மு.ஃ.ஜமுத் தப்ரானி)

இறைவிசுவாசியின் இதயத்தில் கருணை விசாலமாக இருக்க வேண்டும். அதை தனது குடும்பம், மனைவி, மக்கள், உறவினர்கள் என்ற வட்டத்துக்குள் சுருக்கிக் கொள்ளாமல் சமூகத்தின் அனைத்து மனிதர்களுக்கும் கருணையை விசாலப்படுத்த வேண்டும். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள் அனைத்து மக்களிடமும் கருணையுடன் நடந்து கொள்வதை இறைநம்பிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றாகக் கூறினார்கள்:

● நபித்தோழர் அபூ மூஸப் அல் அஷ்அரி (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:
"நீங்கள் ஒருவருக்கொருவர் கருணையுடன் நடந்து கொள்ளாதவரை இறைநம்பிக்கை கொண்டவர்களாக மாட்டீர்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதும், தோழர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அனைவரும் கருணையோடுதான் நடந்து கொள்கிறோம்" என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் "கருணை என்பது நீங்கள் உங்கள் தோழரிடம் மட்டும் கருணையுடன் நடந்து கொள்வதல்ல. எனினும் அது மக்களிடமும் கருணை காட்டுவதாகும். எல்லோருக்கும் பொதுவான கருணையாகும்" என்று கூறினார்கள். (ஆதார நூல்: மு.ஃ.ஜமுத் தப்ரானி)

இந்தக் கருணை, முஸ்லிமான தனிமனிதரின் இதயத்தில் பொங்கி எழுந்து உலக மக்கள் அனைவரையும் தழுவிக்கொள்ளும். ஒரு முஸ்லிமுடைய உள்ளத்தில் இஸ்லாம் இந்த நேசத்தை உருவாக்கி, இறுதியில் முஸ்லிம் சமுதாயத்தையே இரக்கமுள்ள சமுதாயமாக மாற்றுகிறது.

## பகையும் கருணைக்கு தடையல்ல

இதோ திருக்குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்!

● புனிதப்பள்ளியை விட்டு உங்களைத் தடுத்த சமுதாயத்தார் மீதுள்ள பகைமை, வரம்பு மீறுவதற்கு உங்களைத் தூண்ட வேண்டாம். நன்மையிலும், இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுங்கள்! பாவத்திலும், வரம்பு மீறலிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளாதீர்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன். (திருக்குர்ஆன் 5:2).
(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)

● நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக ஆகி விடுங்கள்! ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன். (திருக்குர்ஆன் 5:8)

● "உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தோருக்கும் உதவ மாட்டோம்'' என்று செல்வமும், வசதியும் உடையோர் சத்தியம் செய்ய வேண்டாம். மன்னித்து அலட்சியம் செய்யட்டும். "அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும்'' என்று விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையோன். (திருக்குர்ஆன் 24:22)

# சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கும் மார்க்கம்

இறைவனை வழிபடுவதற்கு எந்தவிதமான இடைத்தரகர்களோ வீண் சடங்கு சம்பிரதாயங்களோ தேவை இல்லை என்று இஸ்லாம் உரைப்பதை அறிவீர்கள். அதனால் இறைவழிபாடு என்ற பெயரில் மக்களிடம் பணம் சுரண்டுவதற்கான வாசல்கள் அனைத்தையும் அடைத்துவிடுகிறது இஸ்லாம். ஆனால் ஏழைகளுக்கும் நலிந்தோருக்கும் தேவையறிந்து செலவிடுவதை முக்கிய வழிபாடாகப் போதிக்கிறது இஸ்லாம். இறைவனை நெருங்குவதற்குரிய வழியாகக் கற்பிக்கிறது இஸ்லாம். சமூகத்தோடு உள்ள பொறுப்புணர்வை இறைவிசுவாசிகளிடம் இயற்கையாகவே வளர்க்கிறது இஸ்லாம்.

அன்றாடம் உண்பதற்கு உணவில்லாத கோடிக்கணக்கான மக்கள் இருக்கும் போது பல வழிபாட்டுத்தலங்களில் உண்டியலில் கோடிக்கணக்கான ரூபாய்கள் போடப்படுவதையும் அவை பலராலும் சுரண்டப்படுவதையும் நாம் கண்டுவருகிறோம்.

தேவையுள்ள மனிதர்களுக்குச் செலவிடாமல் எந்தத் தேவையுமற்ற கடவுளுக்குப் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் செலவிடப்படும் மனித நேயமற்ற காரியங்களைப் பார்க்கும்போது பலரும் நாத்திகத்தின்பால் அடைக்கலம் தேடுகிறார்கள். பல சிந்தனையாளர்களும் “மதங்கள் அர்த்தமற்றவை“ என்று கருதுகின்றனர். “கடவுளை மற மனிதனை நினை” என்று எதிர்ப்பிரச்சாரம் செய்கின்றனர்.

ஏழைகளுக்காக செலவிடுவதும் இறைவனுக்குச் செய்யும் வணக்கம் என்று இஸ்லாம் கூறுகிறது.

இவ்வுலகத்தை இறைவன் ஒரு நாள் அழித்து விட்டு எல்லா மனிதர்களையும் மீண்டும் உயிர்ப்பித்து விசாரணை நடத்துவான். மனிதர்களின் நன்மை தீமைகளுக்கு ஏற்ப பரிசுகளையோ, தண்டனைகளையோ இறைவன் வழங்குவான் என்பது இஸ்லாத்தின் நம்பிக்கை. இது நியாயத் தீர்ப்பு நாள் எனப்படுகிறது.

நியாயத் தீர்ப்பு நாளில் நடைபெறவுள்ள விசாரணையின் ஒரு காட்சியை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றனர்:

மனிதனே! நான் நோயுற்றிருந்த போது என்னை நோய் விசாரிக்க ஏன் நீ வரவில்லை“ என்று நியாயத் தீர்ப்பு நாளில் இறைவன் கேட்பான். “என் இறைவா! நீயோ அகிலங்களைப் படைத்துப் பராமரிப்பவன். உன்னை நான் எப்படி நோய் விசாரிக்க முடியும்?“ என்று மனிதன் பதிலளிப்பான். “எனது அடியான் ஒருவன் நோயுற்றதை நீ அறிந்தும் அவனை நீ நோய் விசாரிக்கச் செல்லவில்லை. அவனை நீ நோய் விசாரிக்கச் சென்றிருந்தால் அவனிடத்தில் என்னைக் கண்டிருப்பாய்“ என்று இறைவன் கூறுவான். “மனிதனே! உன்னிடம் நான் உணவு கேட்டு வந்த போது எனக்கு உணவளிக்க மறுத்து விட்டாயே?“ என்று இறைவன் மீண்டும் கேட்பான். “நீயோ அகிலத்தையும் படைத்துப் பராமரிப்பவனாக இருக்கிறாய். நான் உனக்கு எவ்வாறு உணவளிக்க இயலும்?“ என்று மனிதன் கூறுவான். “என் அடியான் உன்னிடம் உணவு கேட்டு வந்த போது அவனுக்கு நீ உணவளிக்க மறுத்தது உனக்குத் தெரியாதா? அவனுக்கு நீ உணவளித்திருந்தால் அங்கே என்னைக் கண்டிருப்பாய்“ என்று இறைவன் கூறுவான்.எ “மனிதனே! உன்னிடம் எநான் தண்ணீர் கேட்டு வந்த

போது எனக்குத் தண்ணீர் தர மறுத்து விட்டாயே?" என்று இறைவன் மீண்டும் கேட்பான். "என் இறைவா! அகிலத்தின் அதிபதியான உனக்கு நான் எவ்வாறு தண்ணீர் தர இயலும்?" என்று மனிதன் கூறுவான். "எனது அடியான் ஒருவன் உன்னிடம் தண்ணீர் கேட்டு வந்த போது அவனுக்கு நீ தண்ணீர் புகட்டவில்லை. அவனுக்குத் தண்ணீர் புகட்டியிருந்தால் அங்கே என்னைக் கண்டிருப்பாய்" என்று இறைவன் கூறுவான். இவ்வாறு நபிகள்நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம் 4661)

மனிதனுக்கு உதவுவதுதான் இறைவனுக்குச் செய்யும் வணக்கம் என்பதை இறைவனின் இந்த விசாரணை முறையிலிருந்து அறிந்து கொள்ளலாம். சமூகப் பொறுப்புணர்வுக்கு களங்கம் விளைவிக்கும் எந்த ஒரு வழிபாட்டையும் இஸ்லாம் கற்பிப்பதில்லை.

# மக்கள் நலனே இஸ்லாத்தின் அடிப்படை

இஸ்லாம் என்பது ஒரு இனம் சார்ந்த மதம் அல்ல. மாறாக மனித மனம் சார்ந்த ஒரு வாழ்வியல் வழிமுறை. இதை யாரும் எந்த இனமும், நாடும் மக்களும் தனதாக்கிக் கொள்ள முடியும். அதாவது இறைவன் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களை ஏற்று அதன்படி ஒழுக்க வாழ்வை (னளைஉனிடனைநெ) பின்பற்றுதலே இஸ்லாம். அதன் படி வாழ்வோரே முஸ்லிம் என்று அறியப்படுகின்றனர்.

ஒரு மனிதன் எப்போது அல்லது எவ்வாறு முஸ்லிமாக முடியும்?

எப்போது மனிதன் படைத்த இறைவனை ஏற்றுக்கொண்டு அவனது கட்டளைகளைப் புரிந்து கொண்டு அதன்படி வாழத் துவங்குகிறானோ அப்போதுதான் அவன் முஸ்லிமாக ஆகிறான். அதாவது படைத்தவனோடு "இறைவா உன்னை என் வணக்கத்துக்குரியவனாக ஏற்றுக் கொள்கிறேன். நீ அனுப்பிய தூதரை ஏற்றுக் கொள்கிறேன். இன்று முதல் உன் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்கிறேன்." என்று ஒரு உடன்படிக்கை செய்து அதன்படி நிலைத்து நிற்கும்போதுதான் ஒரு மனிதன் முஸ்லிமாக ஆகிறான். முஸ்லிம் என்றால் கீழ்படிபவன் என்று பொருள். அதாவது இறைவன் தரும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்று அதன்படி வாழத் துவங்க வேண்டும்.

**அது என்ன வாழ்க்கைத் திட்டம் ?**

அதற்கு இஸ்லாத்தின் தூண்கள் என்று கூறப்படும்.

**1. கொள்கைப் பிரகடனம்**: "வணக்கத்துக்கு உரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்றும் முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்"என்ற வாசகத்தை மனதார ஏற்று வாயால் மொழிதல்.

**2. ஐவேளைத் தொழுகை:** இந்த வாழ்க்கைத் திட்டத்தை முறைப்படி செயல்படுத்த வேண்டுமானால் நாம் படைத்தவனோடு தொடர்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் தீமை செய்யத்தூண்டும் மன சஞ்சலங்களும் ஷைத்தானின் ஊசலாட்டங்களும் நம்மை வழி தவறச் செய்யாது. அதற்காக விடியற்காலை, மதியம், மாலை. சூரியனின் மறைவுக்குப் பிறகு, உறங்கும் முன் என ஐவேளைகளில் இறைவன் தன தூதர் மூலமாக கற்றுத் தந்த தொழுகைகளை நிறைவேற்றுதல்.

**3. ஜகாத் எனும் கட்டாய தருமம்:** பொருள் மற்றும் செல்வம் என அனைத்தும் இறைவனுக்குச் சொந்தமானவையே. இவை நம்மை பரிசோதிப்பதற்காகத் தரப்படுபவையே. நமக்கு தரப்படுபவற்றில் ஒரு குறிப்பிட்ட பங்கு ஏழைகளுக்கு உரியது. எனவே அவற்றை கட்டாயமாகக் கொடுத்து விட வேண்டும்.

**4. ரம்ஜான் மாத விரதம்:** திருக்குர்ஆன் இறங்கிய ரம்ஜான் மாதத்தில் பகலில் உண்ணுதல், பருகுதல், உடலுறவு இவற்றிலிருந்து தவிர்த்திருத்தல்.

**5. ஹஜ்ஜ் எனும் புனித யாத்திரை:** பொருள் வசதியும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு முறை மக்க நகரிலுள்ள கஅபா என்ற இறையில்லத்தை தரிசிக்கச் செல்லுதல்.

மேற்படி கடமைகளில் தொழுகையை முடிந்தவரை பள்ளிவாசல்களில் கூட்டாக நிறைவேற்ற வேண்டும். அதேபோல் ரம்ஜான் நோன்பின்போது ஏழைகளோடு உணவைப் பங்கிட்டு உண்ணக் கற்பிக்கிறது இஸ்லாம்.இஸ்லாமிய பண்டிகைகளையும் தன் மகிழ்ச்சியை நலிந்தவர்களோடும் எழைகளோடும் பகிர்ந்து கொண்டாடப் பணிக்கிறது இஸ்லாம். இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தில் உள்ள உயர்ந்தவர்களோடும் தாழ்ந்தவர்களோடும் இரண்டறக்கலந்து உறவாடும் வழிமுறைகளையே இஸ்லாம் கொண்டுள்ளது.

## வறியவர்களை பாதுகாக்கும் ஜக்காத்

தொழுகை, நோன்புக்கு அடுத்த கடமையாக ஜக்காத் எனும் கடமை உள்ளது.

வசதியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தனது சொத்துக் கணக்கைப் பார்த்து, அதில் இரண்டரை சதவிகிதம் வழங்க வேண்டும். வயல்களில் உற்பத்தியாகும் பொருட்களில் மானாவாரிப் பயிர்களாக இருந்தால் ஐந்து சதவிகிதமும் மற்ற பயிர்களில் பத்து சதவிகிதமும் வழங்க வேண்டும். ஆடு, மாடு, ஒட்டகம் ஆகிய கால்நடைகளிலும் குறிப்பிட்ட சதவிகிதத்தை வழங்க வேண்டும். இதுவெ ஜக்காத் எனப்படுகிறது.

இதை யாருக்கு வழங்க வேண்டும்? பள்ளிவாசல் கட்டுவதற்கோ, மராமத்துச் செய்வதற்கோ, அதன் நிர்வாகப் பணிகளுக்கோ செலவிடக் கூடாது என்று இஸ்லாம் திட்டவட்டமாக அறிவிக்கிறது.

**யாசிப்போருக்கும், ஏழைகளுக்கும், அதை வசூலிப்போருக்கும், உள்ளங்கள் ஈர்க்கப்பட வேண்டிய (முஸ்லிமல்லாத)வர்களுக்கும், அடிமை(களை விடுதலை செய்வதற்)கும், கடன்பட்டோருக்கும், அல்லாஹ்வின் பாதையிலும், நாடோடிகளுக்கும் தர்மங்கள் உரியனவாகும். இது அல்லாஹ்வின் கடமை. அல்லாஹ் அறிந்தவன் ஞானமிக்கவன். (திருக்குர்ஆன் 9:60)**

இந்த எட்டு வழிகளில்தான் அதைச் செலவிட வேண்டும். இந்த எட்டுமே மனிதர்களுக்கானது தான். மனிதர்களுக்கு உதவுவதை மார்க்கத்தின் ஐந்து கடமைகளில் ஒரு கடமையாக இஸ்லாம் ஆக்கியுள்ளது.

செலவிட வேண்டிய எட்டு வழிகளில் முஸ்லிமல்லாத மக்களுக்கு வழங்குவதையும் குறிப்பிட்டு மதம் கடந்த மனித நேயத்தை இஸ்லாம் பேணுகிறது.

**நல்லவற்றில் நீங்கள் எதைச் செலவிட்டாலும் அது உங்களுக்கே. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவே செலவிடுகிறீர்கள். நல்லவற்றில் நீங்கள் எதைச் செலவிட்டாலும் உங்களுக்கே அது முழுமையாக வழங்கப்படும். நீங்கள் அநீதி இழைக்கப்பட மாட்டீர்கள். (திருக்குர்ஆன் 2:272)**

## மழையில் பொங்கிய மனிதநேயம்!

# வீரமங்கை சுபைதா!

என் தங்கை குடியிருக்கும் வீடு மூன்று அடுக்கு மாடி ஆகும். இதில் ஏறக்குறைய ஆறு குடும்பங்கள் உள்ளன. தரைத்தளத்தில் என் தங்கையின் குடும்பம் உள்ளது. முதல் தளத்தில் ஒரு முஸ்லிம் குடும்பமும், இரண்டாவது தளத்தில் ஒரு மலையாளிகள் குடும்பமும் உள்ளது. பக்கத்தில் ஒரு ஒற்றை மாடி வீடு உள்ளது.

மழையின்போது தரைத் தளத்தில் தங்கையின் வீட்டிற்குள் தண்ணீர் வந்தாலும் முழங்கால் அளவுதான் வரும் என்று நினைத்து, பொருட்களை கட்டில்களின் மீதும் டேபிள்களின் மீதும் எடுத்து வைத்துக் கொண்டு இருந்தாள். பாதி பொருட்களை வைப்பதற்குள் தண்ணீர் இடுப்பளவு உயர்ந்து விட்டது. உடனே அனைவரும் அவளை மேலே மாடிக்கு அழைத்து சென்றுவிட்டனர். பத்து நிமிடத்தில் தரைத்தளம் முழுவதும் முழுகி விட்டது. பக்கத்தில் ஒற்றை மாடி வீடு ஒன்றும் இருந்தது. அவர்களின் வீடு முழுவதும் முழுகி விட்டது. மொட்டை மாடியில் அனைவரும் ஏறிக்கொண்டனர்.

அந்தநாள் இரவு முழுவதும் அங்கேயே தங்கி இருந்தனர். பொழுது விடிந்தது. எங்கள் தங்கையின் வீட்டின் முதல் தளமும் முழுக ஆரம்பித்தது. உடனே முதல் தளத்தில் இருந்த முஸ்லிம் நண்பர் படகு எடுத்து வருவதாக கூறி இறங்கி நீந்திச்சென்றார். இதனிடையே பக்கத்து வீட்டின் மொட்டை மாடி முழுக ஆரம்பித்தது. அவர்கள் பயத்தில் உறைந்து இருந்தார்கள். எங்கள் கட்டிடத்தில் இருந்த சுபைதா என்ற முஸ்லிம் பெண் ஒரு இரும்பு ஏணியை எடுத்து, பாலம் போல எங்கள் வீட்டு பால்கனியில் இருந்து அவர்களின் மொட்டை மாடிக்கு அமைத்து, கயிறால் அவர்களை கட்டி அந்த குடும்பத்தில் இருந்த ஏழு பேரையும் இந்தப் பக்கம் வர உதவியுள்ளார். கட்டிய துணி மட்டுமே அவர்களிடம்.

இதற்கிடையே சிறிய படகுடன் சுபைதாவின் கணவர் வரவே, சுபைதா தன் இரண்டு குழந்தைகளை கயிற்றில் கட்டி கீழே இறக்கினார். அவள் கணவர் குழந்தைகளை வாங்கி படகில் சேர்த்தார். அதன் பின் என் தங்கையை இடுப்பில் கயிற்றை கட்டிக்கொண்டு படகில் குதிக்குமாறு அவர்கள் சொல்லவே அவள் பயந்து மறுத்து விட்டாள். உடனே சுபைதா தன் வீட்டு சாவியை என் தங்கையிடமே கொடுத்துவிட்டு, கைவசமிருந்த இரண்டு கிலோ அரிசி, மற்றும் எமர்ஜென்சி லைட் மற்றும் மெழுகுவர்த்தியை கொடுத்தார். நான் போகிறேன் , உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள், ஊரில் இருந்து திரும்பி வந்ததும் சாவியை வாங்கிக்கொள்கிறேன் என்று கூறினார்.

அதன் பின்னர் கயிற்றின் மூலம் படகில் குதித்து தன கணவருடன் சென்று விட்டார். அவர் கொடுத்த அந்த அரிசியின் மூலம் தான் என் தங்கை மற்றும் அங்கிருந்த அனைவரும் இரண்டாம் தளம் சென்று கஞ்சி வைத்து ஒரு நாள் முழுவதும் பொழுதை கழித்துள்ளனர். சுபைதா இல்லையென்றால் நாங்கள் உயிரோடே இருந்திருக்க மாட்டோம் இது அந்த பக்கத்து வீட்டு அம்மா சொன்ன வார்த்தை.

**-கமலி பன்னீர்செல்வம்- சென்னை (முகநூலில்)**

# லுக்மான் தன் மகனுக்கு செய்த உபதேசம்

லுக்மான் என்ற ஒரு இறையச்சம் கொண்ட ஞானி தன் மகனுக்கு செய்த உபதேசத்தை இறைவன் தன் திருமறையில் பெற்றோர்களும் பிள்ளைகளும் பாடம் பெறுவதற்காக வேண்டி எடுத்துரைக்கிறான்:

**31:13. இன்னும் லுஃக்மான் தம் புதல்வருக்கு: "என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே. நிச்சயமாக இணை வைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்," என்று நல்லுபதேசம் செய்து கூறியதை (நினைவுபடுத்துவீராக).**

(இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனைக் குறிக்கும் அரபுச்சொல் அல்லாஹ் என்பதாகும். 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது இதன் பொருளாகும்.)

இவ்வுலகைப் படைத்த இறைவனை மட்டுமே வணங்கவேண்டும் என்று மக்களுக்கு போதிப்பது பெற்றோரின் முதலாவதும் முக்கியமானதும் ஆன கடமையாகும். படைப்பினங்களைக் காட்டி அவற்றைப் படைத்தவனை பகுத்தறிவு பூர்வமாக அறிமுகப்படுத்தி அவனோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்துவது ஓர் அறிவார்ந்த செயலாகும். அந்த இறைவன் நமக்கு வழங்கிவரும் அருட்கொடைகளை நினைவூட்டி அவன் மட்டுமே நம் வணக்கத்திற்குத் தகுதி உள்ளவனும் நம் பிரார்த்தனைகளுக்கு பதில் அளிக்கக்கூடியவனும் ஆவான் என்பதை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். குழந்தைகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வளர இந்த போதனை மிகவும் அவசியமானதாகும். மாறாக முன்னோர்கள் நமக்குக் கற்பித்துவிட்டுச் சென்றார்கள் என்ற ஒரே காரணத்துக்காக இறைவன் அல்லாதவற்றைக் காட்டி அவற்றைக் கடவுள் என்று கற்பிப்பதும் அவற்றை வணங்க அவர்களை நிர்பந்திப்பதும் பற்பல குழப்பங்களுக்கு வித்திடும் செயலாகும்.

சர்வ ஞானமும் சர்வவல்லமையும் கொண்ட இறைவனுக்கு ஒப்பாக அவன் அல்லாத பொருட்களை சித்தரிப்பதால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத இச்செயல் குழந்தைகளை நாளடைவில் நாத்திகத்திற்குக் கொண்டு செல்கிறது. மேலும் அதனால் இறைவனைப் பற்றிய மரியாதை உணர்வு (seriousness) அகன்றுபோய் குழந்தைகள் உள்ளங்களில் இறையச்சமே இல்லாமல் போய் விடுகிறது. அதன் காரணமாக பாவங்கள் செய்தால் தட்டிக் கேட்கவோ தண்டிக்கவோ யாருமில்லை என்ற உணர்வு குழந்தைகளை ஆட்கொள்கிறது. தனிநபர் வாழ்விலும் சமூகத்திலும் பாவங்கள் மலிந்து பெருக இதுவே மூலகாரணம் ஆகும். ஆளுக்கு ஒன்று ஊருக்கு ஒன்று என்று கடவுளை வெவ்வேறு விதமாக சித்தரித்து அவற்றை வணங்கும்போது மனித குலத்திற்கு உள்ளும் பல பிரிவுகள் உண்டாகி ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளும் நிலையும் இன்ன பிற குழப்பங்களும் உருவாகின்றன. இடைத்தரகர்கள் மூட நம்பிக்கைகளைப் புகுத்தி கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்டவும் இச்செயல் காரணமாகிறது.

இறையச்சம் என்ற பொறுப்புணர்வு ஊட்டப்படாத பிள்ளைகள் இரவுபகல் பாராமல் உழைத்து தங்களை வளர்த்த பெற்றோர்களை நாளை சற்றும் மதிக்காத அவல நிலை உண்டாகிறது. வயதுக்கு வந்ததும் அந்நியர்களோடு ஓடிப்போவதையும், இவர்களது வயதான காலத்தில் இவர்களைப் பராமரிக்காமல் முதியோர் இல்லங்களில் சேர்ப்பதையும், (வட இந்தியாவில்) காசியில் கொண்டு போய் விட்டு விடுவதையும், கருணைக் கொலை என்ற

பெயரில் கொன்று விடுவதையும் அன்றாட நிகழ்வுகளாகக் கண்டு வருகிறோம். இறைவனைப்பற்றியும் மறுமையைப் பற்றியும் முறைப்படி இவர்களை கற்பிக்காமல் வளர்த்ததே இவற்றுக்கெல்லாம் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனவேதான் இறைவன் மேற்படி வசனத்தில் "நிச்சயமாக இணை வைத்தல் மிகப் பெரும் அநியாயமாகும்" என்று கூறுகிறான். பூமியில் அதர்மம் பரவுவதற்குக் காரணமான இப்பாவத்திற்கான தண்டனை பற்றி பிறிதொரு வசனத்தில் இவ்வாறு எச்சரிக்கிறான்:

**அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை" (திருக்குர்ஆன் 5:72)**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :

யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகுவார்.

அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)

இறைவனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு மனிதனும் பேணவேண்டிய முக்கிய கடமை தன் பெற்றோருக்கு நன்றி செலுத்துவதாகும். அவர்களுக்குக் கீழ்படிதலும் அவர்களின் நலன் பேணுவதும் மக்களின் பொறுப்பாகும்.

**31:14. நாம் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி உபதேசம் செய்தோம் அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள் இன்னும் அவனுக்குப் பால் குடி மறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன் ஆகவே "நீ எனக்கும் உன் பெற்றோர்க்கும் நன்றி செலுத்துவாயாக் என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது."**

ஆனால் அதே நேரத்தில் அவர்கள் இறைவன் அல்லாத பொருட்களை வணங்கும் செயலை அவர்களுக்குக் கட்டுப்படக் கூடாது என்பது இறைவனின் கட்டளையாகும்.

இறுதியாக பெற்றோராயினும் சரி பிள்ளைகள் ஆயினும் சரி இந்தத் தற்காலிக உலக வாழ்வு எனும் பரீட்சையை முடித்துக்கொண்டு இறுதித்தீர்ப்புக்காக அவனிடமே திரும்ப வேண்டியுள்ளது என்பதை நினைவூட்டுகிறான் இறைவன்:

**31:15. ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லையோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் வழிபட வேண்டாம் ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக் கொள் (யாவற்றிலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக - பின்னர் உங்கள் (அனைவருடைய) மீளுதலும் என்னிடமேயாகும் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை (அப்போது) நான் உங்களுக்கு அறிவிப்பேன்."**

**திருத்தம்:** திருக்குர்ஆன் நற்செய்தி மலர் டிசம்பர் 2015 இதழ் பக்கம் 7 இல் 'மரணம்' என்கிற தலைப்பின் கீழ் உள்ள செய்தியை கீழ்கண்டவாறு திருத்தி வாசிக்கவும்:

நபி(ஸல்) அவர்களின் நபித்துவ வாழ்க்கையில் 23 வருடங்கள் வாழ்ந்து தமது 63 ஆம் வயதில் மரணித்தார்கள்.

(தவறைச் சுட்டிக்காட்டிய அனைத்து வாசகர்களுக்கும் நன்றி)

**மழையில் பொங்கிய மனிதநேயம்**

## “அல்லாஹ்வுக்கு நான் ஏதும் செய்யட்டுமா?”

”மன சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டேன்.... அல்லாஹ்வுக்கு நான் ஏதும் செய்யட்டுமா?” - காணாமல் போன தன்னுடைய சேமிப்பை, பெற்றுக்கொண்ட பெண்மணி, பூரணி.

நிவாரணப்பணிகளைத் தொடர்ந்து சைதாப்பேட்டை பகுதியில் தூய்மைப்பணி மேற்கொண்ட டிஎன்டிஜேவின் தொண்டர் படையினர் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது குப்பைத்தொட்டியில் ஒரு டிபன் பாக்ஸ் கண்டெடுக்கப்பட்டது. அதை சகோதரர்கள் திறந்து பார்த்த போது அதில் கிட்டத்தட்ட 10பவுன் நகையும், ரூ 1லட்சம் ரொக்கப்பணமும் இருந்துள்ளது.

பணத்தையும், நகையையும் தொலைத்த துயரத்தில் தற்கொலைக்கு முயன்றுள்ளார், அதன் உரிமையாளர் பூரணி என்ற மூதாட்டி. கண்டெடுக்கப்பட்ட உடனேயே இது குறித்து விசாரித்த தவ்ஹீத் ஜமாஅத்தின் தென்சென்னை மாவட்ட நிர்வாகிகள் பூரணி - பாலகுமாரன் தம்பதியினருடைய பணமும் நகையும் தான் அது என்பதை உறுதிப்படுத்தினர்.

அந்த தம்பதியர்களிடம் பணத்தையும், நகையையும் நமது சகோதரர்கள் பத்திரமாக ஒப்படைக்க நகைகளை சரிபார்த்த பிறகு, பணத்தையும் சரிபார்த்து டிபன் பாக்ஸோடு அதை பெற்றுக்கொண்டனர்.

மிகுந்த மகிழ்வுடன் பெற்றுக்கொண்ட அந்த தாய், வுவேது சகோதரர்களிடம்,”மன சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டேன்.... அல்லாஹ்வுக்கு நான் ஏதும் செய்யட்டுமா?” என்று கேட்டு, தன்னுடைய நன்றியினை வெளிபடுத்தினார்.

## “தப்பெண்ணம் கொண்டதற்கு மன்னிக்கவும்....”

”நன்றி, மன்னித்துக் கொள்ளுங்கள்” ஒரு பிராமணப் பெரியவர்

”எதற்கு நன்றி, மன்னிப்பெல்லாம்?” என பதறிய தமுமுகவினரிடம்...

”முஸ்லீம்களுக்கு வீடு தருவதில்லை என்பதை பிராமணர்களாகிய நாங்கள் ஒரு ரூல்ஸாகவே வைத்திருந்தோம் ஆனால் நாங்கள் ஒதுக்கிய நீங்கள் எந்த எதிர்ப்பார்ப்புமின்றி உதவி செய்கிறீர்கள் ஆனால் நாங்கள் நம்பிய யாரும் எங்களுக்கு உதவவில்லை” என அந்த பிராமணப் பெரியவர் சொல்கிறார் என்கிறது நக்கீரன் வார இதழ்...!

## இஸ்லாமியர் எண்ண அலைகள்

குறிப்பிட்ட சில மீடியாக்களும் மதவாதக் கட்சிகளும் இஸ்லாமியர்கள் என்றால் தீவிரவாதிகள், காட்டுமிராண்டிகள், கொடூர எண்ணம் கொண்டவர்கள் என்பது போன்ற எதிர் மறையான எண்ணங்களை மக்கள் மத்தியில் ஆழமாக விதைத்து வைத்திருந்தனர்.

டிசம்பர் 6 போன்ற தேதிகளிலும் இன்ன பிற நாட்களில் முஸ்லீம்களை உள் நுழைத்து தேவையற்ற பதட்டத்தையும் ஒரு மாதிரியான பீதியையும் முஸ்லீம்கள் மேல் விதைத்திருந்தன ஒரு சில சக்திகள். ஆனால் இவையெல்லாம் இந்த வெள்ள மழை நீர் பாதிப்புக்கு முன்புவரைதான்.

இன்று இஸ்லாமியர்களின் சேவை அடிப்படையிலேயே இஸ்லாமியர்கள் நபிகள் நாயகம் போதித்த இரக்கத்தை முன் நிறுத்தி மட்டுமே செயல்படுபவர்கள் என்பதை இந்த உலகத்திற்கு உணர்த்தி உள்ளது இந்த மழை. இஸ்லாமிய மக்களின் எதிர்ப்பார்பில்லாத உதவியை நேரில் கண்ட

மாற்று மத நண்பர்களின் சான்றளிப்புக்கள் (குறிப்பிட்ட சில மீடியாக்கள் திட்டமிட்டு மறைத்த போதும்) மனநிறைவைத் தருகின்றன.
வீடு தேடும் விஷயங்களில் முஸ்லீம் என்பதற்காக இஸ்லாமியர் பட்ட அவமானங்களும் பல.... அவர்கள் நம்பும் மதமும் கேலிக்குள்ளாக்கப்பட்டது! இஸ்லாமிய மார்க்கத்தில் நாங்கள் இருந்த ஒரே காரணத்திற்காக உதவி தந்து நீட்டப்பட வேண்டிய கைகள் பல இஸ்லாமியர்களுக்கு தீவிரவாதிகள் என்ற முத்திரை குத்தி மடக்கப்பட்டது".
இந்த மழையும் - வெள்ளமும் ஏற்படுத்திய பாதிப்புக்கள் விரும்பதக்கவையல்ல - கடின துயர் கொண்டது என்றாலும் இஸ்லாமியர்களின் மனதையும் அவர்கள் தீவிரவாதிகள் அல்ல என்பதையும் மாற்றுமத சகோதரர்கள் புரிந்து கொள்ள கடவுள் ஒரு சோதனையை தந்திருக்கிறான் என்ற ரீதியிலேயே இதை இஸ்லாமியர் காண்கிறார்கள்.
இனி எந்த சக்திகள் நினைத்தாலும் சகோதர சமுதாய மத மக்களையும் எம்மிடமிருந்து பிரிக்கவே முடியாது என்ற நம்பிக்கையை ஆழமாகவே விதைத்திருக்கிறது இப்பெருமழை! (நன்றி: Ismail Optom)

# இரக்கம் அண்ணலாரின் வழிமுறை

ஒரு நாள் நாங்கள் முற்பகல் நேரத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் இருந்தோம். அப்போது செருப்பணியாத (அரை) நிர்வாணிகளாய் வட்டமாய் கிழிந்த கம்பளி ஆடை அல்லது நீளங்கி அணிந்த ஒரு கூட்டத்தார் தம் (கழுத்துகளில்) வாட்களைத் தொங்க விட்டவர்களாக அவர்களிடம் வந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் முளர் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களுடைய ஏழ்மையைக் கண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்களின் முகம் நிறம் மாறிவிட்டது. உடனே அவர்கள் (ஒரு வித தவிப்பு நிலையுடன்) வீட்டுக்குள் சென்று விட்டு வெளியே வந்து பிலால் (ரலி) அவர்களிடம் உத்தரவிட, பிலால் (ரலி) அவர்கள் தொழுகை அறிவிப்புச் செய்து இகாமத்தும் கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழுது விட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது, "மக்களே! உங்களை ஒரே ஆன்மாவிருந்து படைத்த உங்கள் இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்" எனும் (4:1) இறை வசனத்தை முழுமையாக ஓதிக் காட்டினார்கள். மேலும் அல்ஹஷ்ர் என்ற அத்தியாயத்திலுள்ள "நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் நாளைக்கென்று தாம் எதை முற்படுத்தியுள்ளோம் என்பதை பார்த்துக் கொள்ளட்டும். அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள்" எனும் (59:18)வது வசனத்தையும் ஓதிக்காட்டி (முளர் கூட்டத்தாருக்கு தர்மம் செய்யுமாறு கூறி)னார்கள். அப்போது பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டையேனும் (தர்மம் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள்) உடனே (நபித்தோழர்களில்) ஒவ்வொருவரும் தம்மிடமிருந்த பொற்காசுகளிருந்தும் வெள்ளிக் காசுகளிருந்தும் ஆடைகளிருந்தும் ஒரு ஸாஉ கோதுமையிருந்தும் ஒரு ஸாஉ பேரீத்தம் பழத்திருந்தும் தர்மம் செய்தார்கள். அப்போது அன்சாரிகளில் ஒருவர் பை (நிறையப் பொருட்களைக்) கொண்டு வந்தார். அதைத் தூக்க முடியாமல் அவரது கை திணறியது. ஏன்? தூக்கவே முடியவில்லை. பின்னர் தொடர்ந்து மக்கள் (தங்களின் தர்மப் பொருட்களுடன்) வந்து கொண்டு இருந்தனர். இறுதியில் உணவுப் பொருட்களாலும் ஆடைகளாலும் இரு குவியல்கள் சேர்ந்து விட்டதை நான் கண்டேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் முகம் பொன்னைப் போன்று மின்னிக் கொண்டிருப்பதையும் கண்டேன். அறிவிப்பவர்: ஜரீர் பின் அப்தில்லாஹ்(ரலி) நூல்: முஸ்லிம் (1691)

**பேரிடர் கற்பிக்கும் பாடங்கள்**

# நகரவிடாமல் செயலிழக்கச்செய்த மழை

**மேலும், நாம் நாடியிருந்தால் முன்னோக்கிச் செல்லவும், பின்னோக்கித் திரும்பவும் அவர்களால் முடியாதவாறு தம் இருப்பிடத்திலேயே அவர்களை உருமாற்றி விட்டிருப்போம்! (திருக்குர்ஆன் 36:67)**

என்ற இறைவசனத்தை நினைவூட்டியது பெருமழை!

சுற்றிலும் தண்ணீர்க்காடு. எனினும், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. இதுதான் வெள்ளக்காடாக நின்ற சென்னை மக்களின் பரிதாப நிலை!

ஒரு பாக்கெட் அல்லது ஒரு பாட்டில் தண்ணீர் கிடைக்காதா என கண்கள் ஏங்கின. பாலுக்காக அழுத பிள்ளைகளின் கண்ணீர் வற்றிப்போனது. இரண்டு, மூன்று, நான்கு சக்கர வாகனங்கள் நகர முடியவில்லை. பேருந்துகள் இல்லை. பிதுங்கி வழியும் மின்சார ரயில்கள் செல்வதற்குத் தண்டவாளங்களே தெரியவில்லை. சென்னையின் இருபெரும் ரயில் நிலையங்களான சென்ட்ரலும், எழும்பூரும் மொத்தமாக இயக்கத்தை நிறுத்திக் கொண்டன.

மீனம்பாக்கத்தில் நின்றிருந்த விமானங்கள் பொம்மைகளைப் போல மிதந்தன. ஏற்கெனவே புறநகர்வாசிகளுக்கு மட்டும் பழக்கமாயிருந்த படகுகளும், பரிசல்களும் பெருநகரத்திற்கான ஏக போக போக்குவரத்து சாதனங்களாயின.

பார்த்து, பார்த்து வாங்கிய வீடுகளில் இருந்து எவ்வித முன்னறிவிப்பும் இன்றி புகுந்த தண்ணீர் பலரையும் வெளியேற்றியது.

மாதத் தவணையிலும், கடன் அட்டையிலும் வாங்கிய பொருள்கள் எல்லாம் கண் முன்னே மிதந்து சென்றன.

படகில் தப்பிபோகும் போதே கீழே மூழ்கிக் கிடக்கும் கார்களை ஏக்கத்தோடு பார்த்துச் செல்வது தவிர, வேறெதுவும் செய்ய முடியவில்லை. கையில் பணம் வைத்துக்கொண்டு பொருள்கள் வாங்குவதைக் கௌரவக் குறைச்சலாக மாற்றியதன் இன்னொரு முகத்தை ஏ.டி.எம். மையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்தவர்கள் உணர்ந்தார்கள்.

மணிக்கணக்கில் நின்ற பிறகும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் எடுக்க முடியவில்லை. அதுவும் கிடைக்காமல் தவித்தவர்களும் உண்டு.

மின்சாரம் தொலைந்த கணங்கள் உயிர் இருக்கும்போதே இல்லாத உணர்வை உண்டாக்கின!

உயிரைப்போல இறுக்கிப் பிடித்து வைத்திருந்த செல்பேசிகள் செயலிழந்தது இதன் உச்சம். செல்பேசி இன்றி எங்கும் செல்ல முடியாது, எதுவும் செய்ய முடியாது என்பதும் பொய்த்துப்போனது.

செல்பேசிக்கு மின்னூட்டம் (சார்ஜ்) ஏற்ற மின்சாரம் இல்லை. மாற்று வழிகளில் சார்ஜ் ஏற்றினாலும் பேசுவதற்கு சமிக்ஞை (சிக்னல்) கிடையாது.

ஆக, எதையெல்லாம் மனிதன் ஆபத்துகளில் தனக்குத் துணையாக வரும் என்று நம்பினானோ அவை அனைத்தும் கைக்கெட்டும் அருகிருந்தும் ஒன்றையுமே பயன்படுத்த முடியாத நிலை. ஒவ்வொரு மனிதனும் இனி கடந்துசெல்ல இருக்கின்ற வாழ்க்கையின் எதார்த்தங்களை நம்மைப் படைத்தவன் இதன் மூலம் நினைவூட்டுகிறான் என்றே நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

உயிர் என்ற ஒன்று நம்மிடமிருந்து பறிக்கப்பட்டால் செல்பேசிகள் போல் செயலிழந்துதான் போவோம். ஆனால் நம்மை அடக்கம் செய்தபின் மீண்டும் அவ்வுயிர் மீண்டும் உடலில் செலுத்தப்பட்டு நமது செயல்பாடுகள் பற்றி, நாம் முற்படுத்திய நன்மை, தீமைகள் பற்றி விசாரிக்கப்பட்டால்...? தப்பியோட வழியேதும் இருக்காது!

**நிச்சயமாக மரணமடைந்தவர்களை நாமே உயிர்ப்பிக்கிறோம் அன்றியும் (நன்மை, தீமைகளில்) அவர்கள் முற்படுத்தியதையும், அவர்கள் விட்டுச் சென்றவற்றையும் நாம் எழுதுகிறோம் எல்லாவற்றையும், நாம் ஒரு விளக்கமான ஏட்டில் பதிந்தே வைத்துள்ளோம். (திருக்குர்ஆன் 36:12)**

நமது பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப சமாதி வாழ்க்கை வேதனைகள் நிறைந்ததாகவோ சுகம் நிறைந்ததாகவோ அமையலாம்.

தொடர்ந்து வருவது உலக அழிவும் அதைத் தொடர்ந்து நியாயத் தீர்ப்பு நாளும் சொர்க்கமும் நரகமும்...!

**பட்டோலைகள் (வினைச்சுவடிகள்) விரிக்கப்படும் போது-**
**வானம் அகற்றப்படும் போது-**
**நரகம் கொழுந்துவிட்டு எரியுமாறு செய்யப்படும் போது-**
**சுவர்க்கம் சமீபமாக கொண்டு வரப்படும்போது-**
**ஒவ்வோர் ஆத்மாவும், தான் கொண்டு வந்ததை அறிந்து கொள்ளும்.**
**(திருக்குர்ஆன் 81:10-14)**

# சமூக நல்லிணக்கத்திற்காக தியாகம்

ஒரு லட்சம் ரூபாய் வாடகை மதிப்புடைய கடையை தொழுகைக்காக அர்ப்பணித்துள்ள ஹிந்து சகோதரர்..!

மும்பை "முகுந்த்" நகரில் வாழும் அதிசய மனிதர்..!

மும்பையின் வணிக பரபரப்பு நிறைந்த நெருக்கடியான "முகுந்த் நகரில்" உள்ள பழங்காலத்து பள்ளிவாசலை புதுப்பிக்கவேண்டிய நிர்பந்தம் காரணமாக தொழுவதற்கு இடமில்லாமல் தவித்தனர், முஸ்லிம்கள்.

முஸ்லிம்களின் நிலமையை உணர்ந்த, பள்ளிவாசலுக்கு நேரெதிரில் "ஜாஸ் லெதெர்ஸ்" என்ற கடையின் உரிமையாளர் "கலே" என்பவர், தான் புதிதாக திறக்க தயாரான நிலையில் வைத்திருந்த கட்டிடத்தை தொழுகைக்காக அர்பணித்துள்ளார்.

2500 சதுரடிகள் கொண்ட தரை தளத்தில் அமைந்துள்ள அவ்விடத்தின் மாத வாடகை மதிப்பு ரூ. ஒரு லட்சமாகும்.

வாடகை குறித்து முஸ்லிம்கள் தரப்பில் கேட்டபோது எதனையும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார், கலே.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் வாடகை இல்லாமல் கொடுக்கப்பட்டுள்ள அக்கடிடத்தில், தொழுகையாளிகளுக்கு வேண்டிய தண்ணீர் வசதி, மின்சாரம், உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளையும் சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார், கலே.

முஸ்லிம்களுக்கு சொந்தமான பள்ளிவாசலின் கட்டுமானப்பணிகள் முடிய இன்னும் சில மாதங்களாகும் என்ற நிலையில், கலே அவர்கள்,
கடையை ஒப்படைக்க எவ்வித அழுத்தமும் கொடுக்கவில்லை என்பதோடு, கடையின் அனைத்து பகுதியையும் பள்ளிவாசல் நிர்வாகிகளின் முழு கட்டுப்பாட்டில் ஒப்படைத்து வைத்துள்ளார்.

**தகவல்: தமிழ்ச்செல்வன்**

# சுன்னத் (விருத்தசேதனம்) செய்வதால் ஏற்படும் நன்மைகள்

இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் காலம் தொட்டே இஸ்லாம் ஆண்களுக்குப் பரிந்துரைக்கும் ஒரு சிறு ஆபரேஷன்தான் விருத்தசேதனம். இதன்மூலம் பல ஆரோக்கியமான நன்மைகள் உண்டாகின்றன. முஸ்லிம்கள் தங்கள் திருத்தூதர் கற்றுத்தந்த வாழ்வியல் வழி என்று தொன்று தொட்டு கத்னா எனப்படும் ஆண் உறுப்பின் முன்தோலை நீக்கும் முறையை கையாண்டு வந்தனர். இன்று வரை அதைக் கடைப்பிடித்தும் வருகின்றனர்.

இன்று மருத்துவ அறிவியல் அபரிவிதமான வளர்ச்சி கண்டபோது, உலகிலே குழந்தை மருத்துவத்தின் மிக உயர்ந்த அமைப்பான American Academy Of Pediatrics என்னும் குழந்தை மருத்துவத்திற்கான அமெரிக்கன் அகாடமி, கத்னா செய்வதால் அதிக மருத்துவ பயன்கள் உள்ளன என்று *2012* இல் தான் ஆய்வு செய்து உறுதிபடுதயுள்ளது .

AAP கூறும் பயன்களில் ஒரு சில:

**எளிதான சுகாதாரம் :**

கத்னா செய்த ஆணுறுப்பை மிக இலகுவாக சுத்தப்படுத்தி சுகாதாரமாக வைத்து, நுண்கிருமிகள் ஆண்குறியின முன்பக்கம் சேர்வதைத் தடுக்க முடியும். ஆண்குறியின் முன்பு சேரும் அழுக்கை, தனி அக்கறை எடுக்காமல் சாதாரணமாக நீக்கி கத்னா செய்த ஆணுறுப்பைப் பராமரிக்க முடியும்.

**சிறுநீர்ப் பாதை நோய் தொற்று குறையும் வாய்ப்பு :**

சிறுநீர்ப் பாதையில் தொற்றுநோய் வரும் வாய்ப்பு, கத்னா செய்யாத ஆண்களுடன் ஒப்பிடும்போது கத்னா செய்த ஆண்களுக்கு மிகமிகக் குறைவு

சிறுவர்களுக்கு phimosis என்னும் ஆணுறுப்பின் முன் தோல் மிக இறுக்கமாக இருந்து அதனால் சிறுநீர் சிறிது தங்கிவிடும். இந்த நிலை கத்னா செய்த ஆண்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு வருவதே இல்லை. இந்த phimosis காரணமாக சிறுநீர் பாதையில் தொற்று வரும் ஆபத்து அதிகம். சில சமயம் சாதாரண சிறுநீர்ப் பாதை நோய் தோற்று, கிட்னி பாதிப்பை ஏற்படுத்தலாம். இந்த நிலை கத்னா செய்த ஆண்களுக்கு வருவது கிடையாது

**பால்வினை நோய் வரும் ஆபத்து குறைகிறது** :

கத்னா செய்த ஆண்களுக்கு எய்ட்ஸ் உட்பட பால்வினை நோய்கள் வரும் வாய்ப்பு மிக குறைவு. இதை ஆப்ரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வும், ஊனுஊ அயவா அழனநட என்னும் அமெரிக்க ஆய்வும் உறுதிபடுத்துகிறது.

**ஆணுறுப்பில் வரும் பிரச்சினைகள் குறைவு:**

கத்னா செய்யப்படாத ஆண்குறியின் முன்தோலை பின்னால் இழுக்க முடியாமல் போகும் நிலை வருவதால், ஆண்குறியின் முன்தோல் அழற்சி, ஆண்குறியில் அழற்சி வரலாம். தோலின் கீழ் மாவு போன்ற அழுக்கு சேர்ந்து, கட்டி போன்று உருவாகலாம்

**ஆண்குறி கேன்சர் அறவே வாராது:**

கத்னா செய்த ஆண்களுக்கு ஆண்குறியில் கேன்சர் வரவே வராது. .கத்னா செய்த ஆண்களின் மனைவியருக்கு cervical cancer என்னும் கர்ப்பப்பைவாய் புற்று நோய் வரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு.

காரணம் கத்னா செய்த ஆண்களுக்கு HPV என்னும் Human Pappiloma Virus தொற்று வரும் வாய்ப்பே இல்லை .இந்த HPV என்னும் வைரஸ் கிருமிதான் பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப்புற்று நோய் ஏற்படுத்துகிறது. மேலும் கத்னா

செய்த ஆண்குறியில், smegma என்னும் மாவு போன்ற அழுக்கு சேராததால், ஆண்குறியில் வரும் நோய்த்தாக்கம் குறைவு. இதை இன்னொரு ஆப்ரிக்கன் ஆய்வு உறுதிப்படுத்துகிறது

prostate cancer என்னும் ஆண் இனபெருக்க உள் உறுப்பில் வரும் புற்று நோய்,கத்னா செய்த ஆண்களுக்கு வரும் வாய்ப்பு மிக குறைவு என்று இன்றைய ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

**கத்னா பற்றி மருத்துவ அறிவியல் ஆய்வு முடிவுகள் சில:**

ஒரு புதிய ஆய்வு இவ்வாறு உறுதிப்படுத்துகிறது : கத்னா செய்வதால், ஆணுறுப்பில் உள்ள பாக்டீரியா ecocsystem எனப்படும் உயிர் பொருட்கள் சூழ்நிலைக்குத் தக்கவாறு செயல்படும் முறை, அதிகளவில் மாறுகிறது. நோயை உருவாக்கும் பாக்டீரியா எண்ணிக்கை வெகுவாகக் குறைகிறது அதிலும் குறிப்பாக ஆக்ஸிஜென் இல்லாமல் வாழும் பாக்டீரியாவான anaerobic பாக்டீரியா வெகுவாகக் குறைகிறது. அதனால் ஆணுறுப்பில் வரும் நோய்த் தொற்று குறைகிறது .

(தகவல் Journal mBio ஏப்ரல் 16, 2012)

இதே தகவலை இன்னொரு ஆய்வும் உறுதி செய்கிறது. அமெரிக்க ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழக மரபணு ஆய்வாளர் Lance Price, ஒரு பாறையைப் புரட்டி போட்டு ecosystem மாற்றுவதைப் போல் கத்னாவினால் ஆண்குறி பக்டீரியா ecosystem மாற்றம் அடைகிறது" என்கிறார் ("From an ecological perspective, it's like rolling back a rock and seeing the ecosystem change.").

இதுபோல் உகாண்டா நாட்டில் கத்னா செய்த ஆண்களிடம் செய்யப்பட்ட ஆராய்ச்சியில், price மற்றும் கூட்டாளிகள் இவ்வாறு கண்டுபிடித்து உள்ளனர்" கத்னாவினால் நீக்கப்பட்ட தோலின் கீழ் பகுதியில் உள்ள நுண்ணுயிரிகளின் டிழைனளைநசளவைலமிக குறைவாக உள்ளது, மிக நல்ல வி'யம்.காரணம் கத்னாவினால் நீக்கப்படும் நுண்ணியிரிகள் தான் ஆண்குறியில் அழற்சியை ஏற்படுத்துவது"

உலகிலேயே குழந்தை மருதுவதிற்கான மிகப் பெரிய அமைப்பான AAP கடந்த 13ஆண்டுகாலமாக ஏற்றுக்கொள்ள மறுத்து வந்த, கத்னாவினால் ஏற்படும் அதிக நன்மைகளை, கடந்த 2012 ஆண்டு பல ஆய்வுகளுக்குப் பின் உறுதிப்படுத்தி ஒத்துக்கொண்டுள்ளது.

உலகிலேயே கத்னாவால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஆய்வு அதிகம் ஆப்ரிக்காவில் தான் செய்யப்பட்டது

கத்னாவிற்கு எதிராக, இதன் எதிர்ப்பாளர்களால் வைக்கப்பட்ட ஒரு வாதம்--- கத்னா செய்த ஆண்களுக்கு உடலுறவின் போது அதிக உடலுறவு சுகம் கிடைக்காது என்பது தான். ஆனால் இந்த வாதத்தையும் பல ஆய்வுகள் பொய் என்று உறுதி செய்து விட்டன.

இன்னொரு விஷயம் கத்னா செய்யப்பட்ட ஆண்களின் ஆணுறுப்பின் நுனிப்பகுதி, சிறுவயதில் இருந்தே, வேஷ்டி, ஜட்டி அல்லது பேன்ட் போன்றவற்றில் உரசி உரசி பழக்கப்பட்டதால், உடலுறவின் போது பெண்ணுறுப்பில், ஆணுறுப்பை வைத்த உடன் அதிக உணர்ச்சி கூச்சத்தால் ஏற்படும் premature ejaculation எனப்படும் முன்கூட்டியே விந்து வெளியாதல் என்னும் நிகழ்வு, கத்னா செய்த ஆண்ககளுக்கு ஏற்படாது. இதனால் அவர்களின் மனைவியருக்கு உடலுறவில் ஏற்படும் உச்சகட்டத்தை அடையமுடியாமல் போகும் ஏமாற்றம் ஏற்படாது.

**நன்றி: டாக்டர் முஹம்மது கிஸார்**

ஆசிரியர் உரை

## பேரிடர் கற்பிக்கும் பாடங்கள்

# ஒழுக்க வாழ்வின் பால் மீளுவோம்

சென்னைப் பேரிடர் பெருந்துன்பங்களை ஏற்படுத்திவிட்டுச் சென்றாலும், மதங்களைக் கடந்த மனிதநேயம் தழைத்திருப்பது கண்டு அனைவருமே உளமாற மகிழ்கிறோம். உயிர் காக்கும் பணியிலும் உணவளிக்கும் பணியிலும் அசுத்தங்களை அகற்றும் பணியிலும் நிவாரணப் பொருள் திரட்டும் பணியிலும் ஆத்மார்த்தமாக ஈடுபட முடிந்ததில் தமிழக முஸ்லிம்கள் மட்டுமல்ல பெரும்பாலான உலக முஸ்லிம்களும் பெருமகிழ்ச்சி அடைந்து நிற்கும் தருணம் இது! நமக்குள்ளே உள்ள உண்மை உறவை உணரவைத்த இறைவனுக்கே எல்லாப்புகழும்!

**மனிதர்களே! நாம் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். பிறகு நீங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொள்ளும் பொருட்டு உங்களை சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் அமைத்தோம். உண்மையில், உங்கள் இறைவனிடம் அதிக கண்ணியம் வாய்ந்தவர் உங்களில் அதிக இறையச்சம் கொண்டவர்தாம். (திருக்குர்ஆன் 49: 13)**

இன, மொழி, நிற, மத வேற்றுமைகளை மறந்து மனிதகுலம் அனைத்தையும் தங்கள் சகோதரர்களாக பாவிக்கவேண்டும் என்பது இங்கு இறைவன் கற்பிக்கும் அடிப்படைப் பாடமாகும்.

இன்று ஏற்பட்டுள்ள பேரிடர் இந்த தற்காலிக வாழ்வு என்ற பரீட்சையின் ஒரு பாகமே. அதாவது இவ்வுலகம் ஒருநாள் முழுமையாக அழிக்கப்பட்டு மீண்டும் இறைவனின் கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் இறுதி விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப் படுவார்கள். புண்ணியவான்களுக்கு அளவிலா இன்பங்கள் நிறைந்த சொர்க்கமும் பாவிகளுக்கு கடும் வேதனைகள் நிறைந்த நரகமும் நிரந்தர இருப்பிடங்களாக வழங்கப்படும். மீண்டும் இதுபோன்ற ஒரு பேரிடர் நேரிடும்போது அதில் நாம் அழிந்துபோகவும் வாய்ப்புண்டு. இப்பேரிடரில் இருந்து தப்பித்து மீண்டும் உயிர்வாழும் வாய்ப்பு பெற்ற நாம் ஒழுக்க வாழ்வின்பால் மீண்டு இறைவனின் பொருத்தத்தைப் பெறுவது அவசியம் என்பதை உணரவேண்டும்.

**மனிதர்களில் கைகள் தேடிக்கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின் (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்.(திருக்குர்ஆன் 30:41)**

விபச்சாரம் (சினிமா), மது, களவு, இலஞ்சம், பெற்றோரைப் பேணாமை, சிசுக்கொலைகள், போன்ற பாவங்கள் வெட்கமின்றி நாட்டில் பெருகியிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இப்பாவங்களில் இருந்து திருந்தி பாவமன்னிப்பு கோரி இறைவன் கற்பிக்கும் நல்லொழுக்க வாழ்வின்பால் திரும்புவது நம் அனைவர் மீதும் கட்டாயக் கடமையாகும். இது இறைவனுடைய பூமி, இதில் அவன் கற்பிக்கும் ஏவல் விலக்கல்களைப் பேணி ஒழுக்க வாழ்வு வாழும்போது இம்மை வாழ்வும் அமைதியானதாக அமையும். அதற்குப் பரிசாக மறுமையில் சொர்க்கமும் கிடைக்கும்.

# இறைவனுக்கு மகன் இருக்கமுடியுமா?

தன்னைப் போன்றவனே கடவுளும் என்று மூடத்தனமாக மனிதன் நம்ப ஆரம்பித்ததன் விளைவு கடவுளுக்கு மக்களையும் மனைவியரையும் கற்பிக்கத் தொடங்கினான். படைத்தவன் வேறு. அவனால் படைக்கப்பட்டவை வேறு என்ற உண்மையை மனிதன் இங்கே சிந்திக்கத் தவறுகிறான். தான் விரும்பியவாறு படைப்பினங்களை வடிவமைத்து அவற்றைப் படைத்து அவற்றின் தேவைகளைப் பூர்த்திசெய்து பரிபாலித்து வருபவனும் ஆன அந்த இறைவன் தனித்தவன், தன்னிகரற்றவன், தனக்கு உவமையே இல்லாதவன். எல்லாவற்றுக்கும் மேலாக அவன் ஒரே ஒருவனே. அவனுக்குப் பால் (GENDER) இல்லை. அவன் படைப்பினங்களைப் போல் பல்கிப் பெருகுபவனும் அல்ல. அந்த ஏக இறைவனுக்குத்தான் அரபு மொழியில் அல்லாஹ் என்று கூறுகிறோம். இறைவனைப் பற்றி இறைவனே கூறுவதைப் பாரீர்:

**112:1.** **சொல்வீராக: அல்லாஹ் அவன் ஒருவனே!**

**112:2.** **அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன்.**

படைப்பினங்களுக்கும் மனிதர்களுக்கும் ஊண், உறக்கம், சுவாசம் போன்ற பல தேவைகள் உள்ளன. ஆனால் படைத்தவனுக்கு எந்த விதமான தேவைகளும் கிடையாது. படைப்பினங்கள் இத்தேவைகளுக்காக அவ்விறைவனைச் சார்ந்து நிற்கின்றன. ஆனால் அவனோ தன் படைப்பினங்களை விட்டும் முற்றிலும் தேவையற்றவன். (TOTALLY INDEPENDENT).

கடவுளுக்கு எதுவும் தேவையில்லை என்ற உண்மையை மனிதன் புரிந்து கொண்டால் அவன் வழிபாட்டுத் தலங்களில் உணவுப் பொருட்களைக் கொட்டி வீணடிக்க மாட்டான் இதைத் தெளிவாக விளங்கிக் கொண்டால் அவனை யாரும் மதத்தின் அல்லது கடவுளின் பெயர் சொல்லி ஏமாற்ற முடியாது. வழிபாட்டுத் தலங்களில் உண்டியல்களுக்கும் காணிக்கைகளுக்கும் வேலை இருக்காது.!

**112:3.** **அவன் யாரையும் பெற்றெடுக்கவில்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை.**

**112:4.** **அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை.**

ஆம், அவ்விறைவனுக்கு மகன், பேரன், கொள்ளுப்பேரன் என்று கீழேயும் சந்ததிகள் கிடையாது, தந்தை, பாட்டன் கொள்ளுப் பாட்டன் என்று மேலேயும் சந்ததிகள் கிடையாது. கடவுளுக்குப் பிறப்பு என்பது கிடையாது. அது போலவே இறப்பு என்பதும் கிடையாது. அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். அவன் திடீரென உருவானவன் அல்ல. அவன் என்றென்றும் வாழ்பவன். கடவுளுக்கு சந்ததி இருக்க முடியாது என்று உணரும் மக்களிடம் யாரும் வந்து தான் கடவுளின் அவதாரம் என்றோ தான் கடவுளின் பிள்ளை அல்லது சந்ததி என்று கூறி ஏமாற்ற முடியாது.

'கடவுள் பிறந்தான்' என்று யாராவது சொன்னாலே அது மிகப்பெரிய அபத்தம் எனபதை உணரலாம். அப்படிப் பிறக்கும் 'கடவுளுக்கு' கடவுள் தன்மையே இருக்க முடியாது. அப்படிப்பட்ட 'கடவுளுக்கு' தாய் தந்தையர் தேவை என்றாகிறது, 'பிறக்கும் முன் யார் கடவுள்?' என்ற கேள்வி எழுகிறது, இவ்வாறு பல குழப்பங்கள் ஏற்படும். இதை மனிதன் புரிந்து கொண்டால்

கடவுளுக்குப் பிறந்தநாள் கொண்டாட மாட்டான். அதன் பெயரால் நடைபெறும் வீண்விரயங்களிருந்தும் மோசடிகளிளிருந்தும் மனித இனம் பாதுகாக்கப்படும்.
இறைவனுக்கு மகன் இருக்க முடியாது என்ற உண்மையை சற்று பகுத்தறிவு கொண்டு சிந்தித்தாலே மக்கள் விளங்கிக் கொள்ள முடியும். தனக்கு பலவீனம் பாதிக்கும் போது தனக்கு உதவி செய்வதற்க்கு அல்லது தான் இறந்த பின் தான் செய்ய நினைத்த காரியங்களை நிறைவேற்றுவதற்கு என்பன போன்ற தேவை உள்ளவர்களுக்குத்தான் சந்ததிகளின் தேவை ஏற்படுகிறது. ஆனால் சர்வவல்லமை பொருந்தியவனும் என்றென்றும் நிலைத்து வாழ்பவனும் ஆன இறைவனுக்கு இது அறவே பொருந்தாதது.

ஒரு சில இறைத்தூதர்களைப் பற்றி மக்கள் அவ்வாறு கூறி வந்ததை இறைவன் வன்மையாகக் கண்டிக்கிறான்:

**9:30. யூதர்கள் (நபி) உஜைரை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள் கிறிஸ்தவர்கள் (ஈஸா) மஸீஹை அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகிறார்கள் இது அவர்கள் வாய்களால் கூறும் கூற்றேயாகும் இவர்களுக்கு, முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு இவர்கள் ஒத்துப்போகிறார்கள் அல்லாஹ் அவர்களை அழிப்பானாக! எங்கே திருப்பப்படுகிறார்கள்?**

இறைவனின் சாபம் என்றால் அலட்சியம் காட்ட முடியுமா? சிந்தித்துப் பாருங்கள்.

# நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்"

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று ஏசுநாதர் (அவர் மீது சாந்தி உண்டாகட்டும்) கூறியது போன்றே ஒவ்வொரு காலத்திலும் வந்த இறைத்தூதர்கள் அவரவர் காலகட்டத்து மக்களுக்கு கூறியிருந்ததை நாம் காணலாம்.

ஒவ்வொரு இறைத்தூதரும் தத்தமது மக்களிடம் கீழ்கண்டவாறு கூறினார்கள்:
"மக்களே! இறைவனுக்குக் கட்டுப்பட்டு வாழுங்கள். நான் இறைவனிடமிருந்து கொண்டுவந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். என்னைப் பின்பற்றுங்கள், அதன் காரணமாக மறுமையில் மோட்சம் அடைவீர்கள்." (அந்த கட்டுப்பட்டு வாழ்தலே அரபு மொழியில் இஸ்லாம் என்று அழைக்கப் படுகிறது).

உதாரணமாக...

- நூஹ் (Noah) கூறினார் :

**26:107. நான் உங்களின் நம்பிக்கைக்குரிய தூதராவேன்.**
**26:108. எனவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும், எனக்குக் கீழ்ப்படியுங்கள்**
.(அல்லாஹ் என்றால் "வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்" என்று பொருள்)

- இறைத்தூதர் ஹூத் கூறினார்:

**26:125. நான் உங்களுடைய நம்பிக்கைக்குரிய தூதரா வேன். 26:126. எனவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும், எனக்குக் கீழ்ப்படியுங்கள்.**

- சமூத் கூட்டத்தாரின் பால் அனுப்பப்பட்ட இறைத்தூதர் ஸாலிஹ் கூறினார்:

**26:143. நான் உங்களின் நம்பிக்கைக்குரிய ஒரு தூதராவேன்.**
**26:144. எனவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும், எனக்குக் கீழ்ப்படியுங்கள்.**

● இஸ்ராயீலின் சந்ததியினர்பால் அனுப்பப்பட்ட ஈசா நபியும் - அதாவது ஏசு நாதரும்- இது போன்றே கூறினார்:

**61:6. மேலும், மர்யமின் குமாரர் ஈஸா: இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும் எனக்குப் பின்னர் வரவிருக்கும் அஹ்மது என்னும் பெயருடைய தூதரைப் பற்றி நன்மாராயம் கூறுபவனாகவும் இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன் என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!) எனினும், அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளை அவர் கொண்டு வந்த போது, அவர்கள் இது தெளிவான சூனியமாகும என்று கூறினார்கள்.**

இவ்வுலகுக்கு இறுதியாக அனுப்பப்பட்ட இறைத்தூதர் -அதாவது ஏசுநாதர் முன்னறிவிப்பு செய்த - முஹம்மது நபி (ஸல்) அவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

**7:158. (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன் வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது, அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறுயாருமில்லை -அவனே உயிர்ப்பிக்கின்றான் அவனே மரணம் அடையும்படியும் செய்கின்றான்**

முஹம்மது நபி (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட இஸ்லாம் மார்க்கம், அவர்களுக்கு முன்னால் வந்த நபிமார்களின் தூதுத்துவத்தையும், அடிப்படை கொள்கைகளையும் உறுதிசெய்கிறது.

**நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான் ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்ராஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள என்பதே இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது தான் நாடியவர்களை அல்லாஹ் தன்பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான். (42:13)**

# வாசகர் எண்ணம்

● நபிகள் நாயகமும் தோழர்களும் இஸ்லாத்தை வளர்க்க மேற்கொண்ட தியாகங்களை அழகிய முறையில் எடுத்துக் கூறியது டிசம்பர் இதழ்.

**- ஏ சி. பிரபாகரன், அல்சூர், பெங்களூர்**

● நவம்பர் மாத இதழில் இறைத்தூதரின் இளமைப்பருவம் பற்றி விரிவாகத் தந்திருந்தது நெஞ்சுக்கு நிறைவாக இருந்தது . எத்தனை அறிய நிகழ்ச்சிகள் ! உலக நாடுகளின் உயர் சிந்தனையாளர்கள் அன்னலாரை பற்றி சொன்ன அறிய கருத்துகளை தொகுத்து தந்திருந்தது மிக சிறப்பு . மலரை தொடர்ந்து அனுப்புவதற்கு நன்றி.

**- தஞ்சை என்.ஜே. கந்தமாறன் - சென்னை**

● இம்மலர் தற்செயலாக படிக்க நேர்ந்தது. அல்ஹம்துலில்லாஹ், மிக அருமையான இதழ் இது. எனக்கும் அண்டை அயலாருக்கும் இது மிகவும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். தொடர்ந்து இந்த மலரை அனுப்பவும்.

**- ஷேய்க் கலீல் - கொளத்தூர் - சென்னை**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு शम्श அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் शम्श மூலம்,एशएन्ध थन्न என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக

தொடர்பு எண்: 09742899305 / 07353307054


Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


**மாற்றுமத அன்பர்களுக்கு...**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற தொடர்பு கொள்ளுங்கள்:**

ஓசூர்: 9994713191 தர்மபுரி: 9842627171 கோவை: 9003555755
திருப்பூர் : 9150068919 குன்னூர்: 9843622246 திருச்சி: 9865446344
மதுரை: 9789341714 சென்னை: 9944656942/9894442844 சேலம்: 9994091364 கும்பகோணம்: -9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 மயிலாடுதுறை: 9942941190 தென்காசி: 9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994453346 உடுமலை: 9865051914 பழனி: 9791929377 ஊட்டி: 9543963412 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210
ஈரோடு: 7373947869 /9942958888 KGF: 9845217262


Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, #8, 4th cross, 2nd main, LB Sastri nagar, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNE/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, MYSORE ROAD, BANGALORE 560026 on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4.
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................




மேலும், அ(வ்விறை)வன் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.

"உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்திற்காக (அவன் திருப்பொருத்தத்திற்காக) உங்களிடமிருந்து பிரதிபலனையோ (அல்லது நீங்கள்) நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ நாங்கள் நாடவில்லை" (என்று அவர்கள்கூறுவர்).
(திருக்குர்ஆன் 76: 8,9)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் என்று பொருள்)